1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதற்கான விதி முறைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால், எப்படி அவற்றை மாற்றியமைக்கலாம் என்பது அதிகாரிகளுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: பர்மனென்ட் தியேட்டர்கள், டூரிங் தியேட்டர்கள் இவற்றிற்கிடையில் உள்ள தூரம் ஒரு மைலுக்குக் குறைவாக ஏறக்குறைய இரண்டு பர்லாங் தூரமாக இருந்தாலும், அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்படி வரும் கோரிக்கைகள் மீதுதான் அதிகாரிகள் மட்டத்தில் பரிசீலனை நடக்கிறது.

Non-recognised Schools in Tamil Nadu.

* 268 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any schools which have not received the recognition and approval from the State Government are being run and maintained by the Panchayats and Panchayat Unions in this State;

(*b*) if so, the total number of such schools; and

(*c*) the total number of students studying in such of those non-recognised schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 96.

(இ) 4,220.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, இந்த மாதிரி அங்கீகாரம் கிடைக்காத பள்ளிக்கூடங்கள் பல இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் படித்து பாஸ் செய்த மாணவர்கள், மேல் படிப்புக்கு மற்றைய பள்ளிகளுக்குப் போனால், அங்கீகாரம் இல்லாத பள்ளியில் படித்தார்கள் என்பது தடையாக இருக்கிறது. ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு அங்கீகாரம் அளிக்க, அல்லது அந்தப் பள்ளிகளில் படித்துத் தேறிய மாணவர்கள் மற்றைய பள்ளிகளுக்குப் போகும் போது, இந்தப் பள்ளிகளுக்கு அங்கிகாரம் இல்லை என்பது தடையாக இல்லாமல் இருக்கும் வகையில் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு துவக்கப் பள்ளி நிறுவவேண்டும் என்றால், 300 மக்கள் இருக்கவேண்டும், அல்லது ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் வேறு பள்ளி இல்லை என்றால் ஆரம்பிக்கலாம் என்ற சூழ்நிலையில், அப்படி முதலில் ஆரம்பித்து விட்டு, பிற்பாடு அரசாங்கத்திற்கு எழுதி அனுமதி பெறலாம் என்ற உத்தரவு இருந்தது. ஆனால், அந்த அடிப்படையில் 300 மக்கள் அல்லது ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் பள்ளி இல்லாமை ஆக இரண்டையும்

கவனிக்காமல், ஆரம்பிப்பதைமட்டும் கவனித்து, ஆரம்பித்துவிட்டு, அனுமதிக்கு வந்ததால் 96 பள்ளிகளுக்கு அனுமதி மறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த மாதிரிச் சங்கடமான சூழ்நிலையில், சென்ற மார்ச் திங்களில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அதிகாரிகளைக் கலந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். எந்த எந்தப் பள்ளிகளில் 30 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு, 20 மாணவர்களாவது வருகை தந்திருக்கிறார்களோ அந்தப் பள்ளிகளையெல்லாம் அங்கீகரித்து விடலாம்; ஆனாலும் இனிமேல் பள்ளிக்கூடங்களை முன்கூட்டியே அரசின் உத்தரவு இல்லாமல் துவங்கக் கூடாது என்றும் நடைமுறைப் படுத்தப் பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த மாதிரி பஞ்சாயத்து யூனியனில் பள்ளிக்கூடங்களைத் திறந்துவிட்டு அங்கீகாரத்திற்கு எழுதலாம் என்ற அடிப்படையில், 300 ஜனத் தொகைக்கு அதிகமாக இருந்து, ஒரு மைலுக்குக் குறைவாக இருந்தாலும், அங்கீகாரம் இல்லாமல் இருக்கிறது. அங்கீகாரம் கிடைக்கும் என்று தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதைப்பற்றி முடிவு எடுத்திருப்பது பற்றிய ஆர்டர்களைச் சீக்கிரம் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆணை பிறப்பித்து அனுப்பப்படாமல் இருந்தால், அதைப்பற்றி எழுதினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : புதிய பள்ளிக்கூடங்களை அங்கீகரிக்க விதிமுறைகள் செய்யப்பட்டு, அதன்பேரில் 30 மாணவர்கள் இருந்து, 20 மாணவர்கள் வந்திருந்தாலும் அனுமதி கொடுப்பது என்பது இருந்தாலும், முன்னால் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் படித்து இருப்பவர்களை, பாஸ் செய்திருப்பவர்களை வேறு பள்ளிகளில் சேர்க்க வழி வகை செய்யக்கூடிய உத்தரவைப் போட முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படித்துப் பாஸ் செய்த மாணவர்களுடைய பிரச்சினையை அரசு கவனிக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட பள்ளிகளுக்குத் தொடர்ந்து அங்கீகாரம் அளிக்கும் நிலையை அரசாங்கம் ஏற்க முடியாது.

அரிசன நலத்துறை ஆசிரியர்கள்

*** 269 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரிசன நல இலாக்காவின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களை முன்னாள் ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அவர்களது சர்வீசுடன் மாற்றி அனுமதிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனை யிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.